அசல் வழக்கு எண்.15/2016 தேதி. 04.03.2020

வா.சா.1 சண்முகம்

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

தாவா சொத்தின் சுவாதீனம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பெரியசாமி பண்டாரம், முத்துசாமி பண்டாரம் அவரது மகள்களிடமிருந்து தாவா சொத்தை கிரையம் வாங்கினேன். முத்துசாதி பண்டாரத்தின் மகள்கள் பெயர் தங்கம்மாள், வேலம்மாள், மற்றொரு மகள் பெயர் தெரியவில்லை. தாவா முதல் அயிட்ட சொத்து கர்மா பண்டாரத்தின் சொத்தா என்றால் பெரியசாமி பண்டாரம், முத்துசாமி பண்டாரத்தின் சொத்தாகும். முத்துசாமி பண்டாரம், பெரியசாமி பண்டாரத்திடம் கிரையம் வாங்கிய அசல் கிரையப்பத்திரத்தை வழக்கில் தாக்கல் செய்யவில்லை. அதற்கான காரணத்தையும் சொல்லவில்லை. முத்துசாமி பண்டாரம், பெரியசாமி பண்டாரத்தின் கிரைய சொத்தா என்றால் ஊர் நத்தமாகும். எதற்காக பெரியசாமி பண்டாரத்தின் மகள்களிடம் சேர்த்து கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் அவர்களுக்கும் உரிமை உள்ளதால் வாங்கியுள்ளேன். வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தில் பெரியசாமி பண்டாரமோ அவரது மகள்கள் காளியம்மாள் மற்றும் தங்கம்மாளோ கையெழுத்து போடவில்லை என்பதால் தான் அசல் பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆரம்பத்தில் கர்மா பண்டாரத்தின் மகன் பெரியசாமி பண்டாரத்தால் கிரையம் பெறப்பட்டு என நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது சாட்சி முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. தாவா முதல் அயிட்ட சொத்தில் பெரியசாமி பண்டாரத்தின் மகள்களுக்கு உரிமை உள்ளது என்றும், அவர்களுக்கு தெரியாமல் மோசடியாக வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா முதல் அயிட்ட சொத்திற்கு நான் தனிப்பட்ட உரிமையாளர் கிடையாது என்றால் சரியல்ல. 2013 ஆம் வருடம் தாவா சொத்துக்களை 1,2 பிரதிவாதிகள் 3ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்ததாக சொல்லியுள்ளதால் அந்த கிரையம் செல்லாது என்று வழக்குரையில் பரிகாரம் கேட்கவில்லை. தாவா முதல் அயிட்ட சொத்தை நான் எந்த காலத்திலும் அனுபவம் செய்தது கிடையாது என்றால் சரியல்ல. தாவா 2வது அயிட்ட சொத்தை சுந்தரநாதன் என்பவரிடம் கிரையம் வாங்கினேன். தாவா 2வது அயிட்ட சொத்தை 2013 ஆம் ஆண்டு நான் கிரையம் வாங்கும் போது அந்த வீட்டிற்கான வீட்டுவரி ரசீது

யார் பெயரில் இருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மின் இணைப்பும் யார் பெயரில் இருந்தது என்று தெரியாது. தாவா 2 வது அயிட்ட சொத்து தாவா முதல் அயிட்ட சொத்திற்கு அருகிலேயே இருந்தது என்றால் சரிதான். 2013 ஆம் ஆண்டு நான் கிரையம் வாங்கும்போது தாவா 2 வது அயிட்ட சொத்திற்கான பட்டா சுந்தரநாதன் பெயரில் தான் இருந்தது. நான் பார்த்தேன். அந்த பட்டாவை எனது கிரையப்பத்திரத்துடன் இணைத்து தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)